செ.வெ.எண்-15 நாள்-11.03.2018

# அரியலூர் மாவட்டத்தில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்களை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் 70-வது பிறந்த நாளை முன்னிட்டு, 50 சதவீதம் மானியத்தில் **உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (11.03.2018) நடைபெற்றது.

இவ்விழாவில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.மா.சந்திரகாசி** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில், 102 உழைக்கும் மகளிருக்கு அம்மா **இருசக்கர வாகனங்களை** வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசியதாவது :-

பெண்களின் வளர்ச்சியை நாட்டின் வளர்ச்சியாக கொண்டு எண்ணற்ற பல திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் குழுக்களுக்கு வங்கி கடன்கள், புதிய மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைத்தல் போன்று பெண்கள் நலன் காக்கும் அரசாக அம்மாவின் வழியில் என்றென்றும் செயல்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் முத்தான திட்டமான அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

தமிழகத்தில் உழைக்கும் பெண்கள் பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் 2017-18 ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்சம் இருசக்கர வாகனங்கள் வழங்கப்பட உள்ளது. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 24.02.2018ம் தேதி சென்னையில் இத்திட்டம் முதல் முதலில் தொடங்கிவைக்கப்பட்டது.

இரு சக்கர வாகனங்கள் 50 % மானியமாக ரூ.25,000/- அல்லது வண்டியின் விலையில் பாதி இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. வாகனங்கள் சொந்த நிதியிலிருந்தும், வங்கி கடன் மூலகமாகவும் வாங்கலாம்.

அரியலூர் மாவட்டத்திற்கு ஊரக பகுதிகள் 967 பயனாளிகளுக்கும் மற்றும் நகர்ப்புற பகுதிகள் 121 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 1088 பயனாளிகளுக்கு அரியலூர் மாவட்டத்தில் வழங்கப்பட உள்ளது. இதில் இன்று (11.03.2018) முதல் கட்டமாக 102 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தை பணிக்கு செல்லும் பெண்கள் முழுமையாக பயன்படுத்தி பயன்பெறுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

**இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

தமிழகத்தில் உழைக்கும் மகளிருக்காக முன்னாள் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் 70வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசு அம்மா இருசக்கர வாகனம் என்ற சிறப்புத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, இன்று (11.03.2018) இம்மாவட்டத்தில் 102 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இருசக்கர வாகனம் பெற்ற பயனாளிகள் அனைவரும் முதலில் சாலை விதிகளை கடைபிடித்து, பயணிக்க வேண்டும். குறிப்பாக, தலை கவசம் அணிந்து வாகனத்தினை சீரான வேகத்தில் தங்களுடைய பணிக்கு செல்ல வேண்டும்.

இத்திட்டம் பெண்களுக்கு மேலும் வலுசேர்க்கும் திட்டமாகும். இதனை பயன்படுத்தி பெண்கள் தங்களுடைய பொருளாதரத்தினை உயர்த்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தவைர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோஷ்வரி, மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, திட்ட இயக்குநர் (தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) அ.லலிதா அனைவரையும் வரவேற்றார். முடிவில், உதவி திட்ட அலுவலர் (தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) சீ.சரவணபாண்டியன் நன்றி கூறினார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**